# உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

**கர்த்தருடன் போவதற்கு ஆயத்தமில்லாத ஒரு வியாதியற்ற மனிதனாய் இருப்பதைவிட கர்த்தருடன் ஆயத்தமாக உள்ள ஒரு வியாதிப்பட்ட மனிதனாய் இருப்பதையே விரும்புவேன். ஆயத்தமாய் இருப்பது நல்லது. அது எப்படியாயினும், நாம் ஆத்துமாவிலும், சரீரத்திலும் நலமாக இருப்பதை தான் தேவன் விரும்புகிறார். நம்முடைய எல்லா அக்கிரமங்களையும் அவர் மன்னித்து, நம்முடைய நோய்களையெல்லாம் அவர் குணமாக்குகிறார்.**

---

*செய்தி:* 58–10–12 திடீரென்று சபையானது இரகசியமாக மறைந்து போகுதல்

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# உறுதியோடு ஜெபித்து விட்டு (Prayed up), போக ஆயத்தமாகுங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 53-12-01 தேவனால் அருளப்பட்ட பாதை

151. ஐயர்லாந்தைக் கடந்து வந்து கொண்டிருந்த ஒரு சிறு ஐரிஸ் தாயாரை அது எனக்கு நினைவுப்படுத்துகிறது. அவர்கள் தம்முடைய மகளைச் சந்திக்கும் படியாக, நியூயார்க் - கிற்குப் போய்க் கொண்டிருந்தார்கள். வழியில், அவர்கள் எங்கள் கப்பலைக் காப்பாற்றுங்கள் (SOS - Save Our Ship) என்ற ஒரு இக்கட்டு செய்தியை அனுப்பினார்கள், அந்தக் கப்பல் ஏறக்குறைய மூழ்கிக் கொண்டிருந் தது. அவர்களோ.... அதில், அடித்தளத்தில் ஏதோவொருவிதமான ஆரவார இசைக் கூத்து இசையை இசைத்துக் கொண்டிருந் தார்கள், அவர்கள் எல்லாரும் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். கப்பல் கேப்டன், இன்னுஞ் சரியாகச் சொன்னால், கப்பல் தலைவன் கீழே இறங்கி வந்து,

"எல்லாரும், ஒரு நிமிடம். உங்களுடைய இசையை மாற்றுங்கள். நம்மால் முப்பது நிமிடங்கள் தாக்குப்பிடிக்க முடியுமானால், நாம் அங்கு இருப்போம். நம்மால் தாக்குப்பிடிக்க முடியவில்லை என்றால், நாம் கடலின் அடியில் (போகப் போகி றோம்" என்றான்.

152 எல்லாருமே, அவர்கள் உம்மண்டை, என் தேவனே, என்பதை இசைக்கத் தொடங்கினார்கள், எல்லாருமே தரையில் விழுந்து, ஜெபிக்கத் தொடங்கினார்கள்.

சிறிய வயதான ஐரிஸ் தாயாரோ, இந்தவிதமாக சுற்றிலும் இணைக்கப் பட்டிருந்த ஒரு வஸ்திரத்தையும், அவர்க ளுடைய நீளமான சட்டை கைகளையும் உடையவர்களாக, அவர்கள், 'மகிமை! அல்லேலூயா! அல்லேலூயா!" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

153. ஏன், அந்த கப்பற்தலைவனோ, "அம்மையீர், உங்களுக்கு என்ன வாயிற்று? ” என்று கேட்டான்.

154. "நான் சந்தோஷமாயிருக்கிறேன்” என்று கூறினார்கள்.

155. "நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள். இப்பொழுதி லிருந்து முப்பது நிமிடங்களில், நாம் ஒருவேளை கடலின் அடியில் இருக்கலாம் என்று நான் சொன்னது உங்களுக்குத் தெரியுமா? ” என்றான்.

156. "நீங்கள் சொன்னது எனக்குப் புரிந்தது” என்றார்கள்.

157. "நீங்கள் ஏன் ஜெபிக்கக் கூடாது? ” என்றான்.

158. "நான் உறுதியோடு ஜெபித்து விட்டேன் (prayed up), நான் ஜெபிக்க வேண்டியதில்லை” என்று கூறினார்கள்.

சரி. "நான் ஜெபித்துவிட்டேன். ஓ, மகிமை! கர்த்தருக்குத் துதி உண்டாவதாக!" என்றார்கள்.

159. "சீமாட்டியே, உங்களால் அதை எப்படி செய்ய முடிகிறது, நீங்கள் ஜெபித்து விட்டீர்களானால், நீங்கள் எதைக் குறித்து சத்தமிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? " என்று கேட்டான்.

160. "நல்லது, இப்பொழுதிலிருந்து முப்பது நிமிடங்களில், நாம் தாக்குப்பிடிப் போமானால், நாம் நியூயார்க்கில் இருப் போம் என்று நீர் கூறினீர்" என்றார்கள்.

161. "அது சரியே."

162. 'நாம் தாக்குப்பிடிக்காவிட்டால், நாம் கடலின் அடியில் இருப்போம்."

163. "அது சரியே."

164. அவர்கள், "மகிமை! எனக்கு நியூயார்க்கில் ஒரு மகள் இருக்கிறாள்,

நான் அவளைக் காணத்தான் போகிறேன். நான் நாம் தாக்குப்பிடிக்காமல் போனால், மகிமையில் எனக்கு ஒரு (மகள்) இருக்கி றாள், எனவே முப்பது நிமிடங்களில் (ஏதாவது) ஒரு மகளை நான் காணப் போகிறேன். அல்லேலூயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்றாள்.

165. அந்தவிதமாகத்தான் நீங்கள் ஜீவிக்க விரும்புகிறீர்கள். அல்லேலூயா! சரி. உறுதியோடு ஜெபித்து விட்டு (Prayed up), போக ஆயத்தமாகுங்கள். ஆமென். தேவனால் அருளப்பட்ட பாதையில் நடந்து, எந்த நிமிடத்திற்கும் ஆயத்தமாக இருங்கள். ஆமென். நீங்கள் அவருடைய பிரசன்னத்தில் வரும்படிக்கு அவர் உங்களை எந்த நிமிடத்தில் அழைப்பார் என்று உங்களுக்குத் தெரியாது.

---

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**

# இது ஒரு ஆயத்தப்படும் நேரமாகும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 53-10-18 எலியா

43. நாம் என்னச் செய்யப் போகி றோம்? தேவன்.... ஐ அடைத்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

**நாம் ஆயத்தமாக வேண்டும் என்பதில் வியப்பொன்றுமில்லை.**

ஆமோசில் என்று நம்புகிறேன், அது "ஓ இஸ்ரவேலே, உன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. நீ செய்திக்கும் மற்றவை களுக்கும் செவிகொடாமல் இருக்கிறாய். ஆயத்தப்படு" என்று கூறுகிறது.

**கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு உலகமானது ஆயத்தப்படும்படியான ஒரு நேரம் எப்பொழுதாவது இருந்திருக்குமா னால், அது இப்பொழுது தான். இதற்குச் செவிகொடுங்கள்.**

44. கலியாணத்திற்காக (weddings) ஆயத்தப்படுங்கள்.

நீங்கள், "நான் ஏன் கட்டாயம் ஆயத்தப்பட வேண்டும்? பிரசங்கியாரே, நான் ஏன்-ஏன் கண்டிப்பாக தேவனை சந்திக்க ஆயத்தப்பட துவங்க வேண்டும்? நீர் எதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக் கிறீர்? " என்று கேட்கலாம்.

நீங்கள் ஒரு கலியாணத்திற்காக ஆயத்தப்பட்டு, நீங்கள் அதில் ஏமாற்ற மடையவும் செய்யலாம். ஆம், ஐயா.

ஏதோவொரு இடத்தில், அல்லது வேறு ஏதோவொரு மகத்தான கூட்டத்திற்காக நான் ஆயத்தப்படுகிறேன் என்று உங்களால் கூற முடியும், நீங்கள் அதில் ஏமாற்றமடையவும் செய்யலாம்.

**ஆனால் நீங்கள் ஏமாற்றமே அடைந்து போய்விடாத ஒரு ஆயத்தம் அங்கு உள்ளது,**

**அது நீங்கள் தேவனை சந்திக்க வேண்டும் என்பது தான்**, நீங்கள் ஒவ்வொருவருமே (ஆயத்தப்பட்டாக வேண்டும்.)

**எனவே, எது என்னைச் சிந்திக்க வைக் கிறது என்றால், நான் அறியும் ஒவ்வொரு தடவையும், ஒரு நரைத்த தலைமயிரைக் காணும் ஒவ்வொரு தடவையும், அது என்னிடம், "நான் தேவனை சந்திக்க கண்டிப்பாக ஆயத்தப்பட்டாக வேண்டும்" என்று பேசுகிறது.**

**அபாயச் சங்கு (siren) ஊதப்படுவதை நான் கேட்கும் ஒவ்வொரு தடவையும் நான் கண்டிப்பாக தேவனைச் சந்திக்க ஆயத்தப் பட்டாக வேண்டும் என்று அறிகிறேன்.**

## இது ஒரு ஆயத்தப்படும் நேரமாகும்.

**ஒரு மரணத்தைக் குறித்தோ அல்லது எதைக் குறித்துமோ நான் கேள்விப்படும் ஒவ்வொரு தடவையும், அது ஒரு**

**ஆயத்தப்படும் நேரமாக இருக்கிறது, தேவன் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்.**

**நீங்கள் அந்தக் காரியங்களைக் காணும் போது, வியாதியை நீங்கள் காணும்போது, மருத்துவரின் அலுவலகத்தை நீங்கள் காணும்போது, நீங்கள் அந்தக் காரியங் களைக் காணும்போது, தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு என்ற ஒரு எச்சரிக்கையாக அது - அது இருக்கிறது, அது சமீபமாயுள்ளது.**

45. நீங்கள் இங்கே இந்த வாரத்தில், ஒரு மனிதனை, ஒரு வாலிபனைக் காண்கி றீர்கள், திரும்பிப் பாருங்கள், அதற்கு எந்த நேரமும் இல்லாதது போன்று தோன்று கிறது, அங்கே அவன் ஒரு முடிவுக்கு வருகிறான், அவனுடைய தலைமயிர்கள் நரைத்துக் கொண்டிருக்கின்றன, மேலும் அந்த அழகான வாலிப பெண், அவள் வயதாகி தளர்வுற்றுக் கொண்டிருக்கிறாள்,

தேவனை சந்திக்க ஆயத்தப்பட அது ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது.

ஆம், ஐயா, அதை நோக்கி உங்களைச் சுட்டிக்காட்டும் எல்லாமே நியாயத்தீர்ப்பு நாளிலே உங்களுக்கு எதிரான சாட்சியாக இருக்கும்.

நான் பாதையின் முடிவுக்கு வரும் போது, நீங்கள் பாதையின் முடிவுக்கு வரும்போது, நாம் அங்கே அடையும் போது, இங்கேயிருக்கும் எல்லாமே, மரங் களும், எச்சரிக்கை செய்யும் ஒவ்வொன் றும் நியாயத்தீர்ப்பில் நமக்கு எதிராக எழும்பும்படி தேவன் செய்யப் போகிறார். துன்மார்க்கரின் கூக்குரல்களும் கூட உங்களைக் குற்றவாளிகளென்று தீர்க்கும். நரகத்தில் இருக்கும் துன்மார்க்கரின் கூக்குரல்களும், நீங்கள் அங்கே நின்று கொண்டிருக்கும் போது, "நல்லது நான்... நான் சரியானதையே செய்யக் கருதினேன்,

நான் -நான்-நான்..." அங்கே நரகத்தில் அவர்களில் இலட்சக்கணக்கானோர் (millions) இருப்பார்கள், அவர்கள், "நீர் அவனைக் குற்றவாளியாகத் தீர்த்திருக்க வேண்டும், ஏனென்றால் நானும் அதே நோக்கத்தைக் கொண்டிருந்தேன், நீரோ என்னை இங்கே கீழே அனுப்பி விட்டீரே. நீர் நீதிபரர் அல்ல, தேவனே, நீர் அதனோடு அவனை கண்டுகொள்ளாமல் விட்டு விட்டீரே" என்று கூறுவார்கள்.

46. கன்னி மரியாளே மேலறைக்கு ஏறிப்போய், மதுவின் கீழாக குடித்து வெறித்த ஒரு பெண்ணைப் போல தள்ளாடும் அளவுக்கு, அவள் அப்படிப் பட்ட ஒரு வழியில் பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்படும் வரையில், அங்கே தங்கியிருந்திருக்க வேண்டியிருந்திருக்கு மானால், அதைக் காட்டிலும் குறைவான

எதையும் கொண்டு நீங்கள் எப்படி உள்ளே பிரவேசிக்கப் போகிறீர்கள்?

**ஆம், ஐயா, சகோதரனே, நாம் அதனோடு முட்டாளாக்கிக்கொள்ளுவதை நிறுத்தி, துரிதமாக வந்து தேவனோடு சரிப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது தேவனுடைய வல்லமை நம்முடைய ஜீவியங்களுக்குள் வரும். அது உண்மையாக இருக்கிறது. ஆமாம்.**



# ஆனால் கர்த்தரை நேசிக்கிறவர்கள் அவருடைய பிரசன்னமாகுதலை விரும்புவார்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

**செய்தி: திடீரென்று சபையானது இரகசியமாக மறைந்து போகுதல்,** *அக்டோபர் 12, 1958, பத்தி எண் 8, 9*

---

வழக்கமாக இன்றைக்கு உலகத்தில், ஜனங்கள் கர்த்தருடைய பிரசன்னமாகுதலை ஒரு பயங்கரமான, திகில் உண்டாக்குகிற காரியமாக எண்ணுகிறார்கள். “ஒ, உலகமானது நிச்சயமாக அதற்கு வந்தாக வேண்டும்... அதைக் குறித்து என்னிடம் பேசாதீர்கள்” என்று அவர்கள் கூறுவார்கள்.

அந்தக் காரியங்களைக் குறித்து அறிந்து கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. அவை களைக் குறித்து அவர்களுக்கு அக்கறை யில்லை, அவர்கள் இன்றைய தினத்திற்குரிய ஜீவனத்துக்காகவே இருக்கிறார்கள்.

**ஆனால் கர்த்தரை நேசிக்கிறவர்கள் அவருடைய பிரசன்னமாகுதலை விரும்பு வார்கள்.**

கடந்து போன உங்கள் அன்பார்ந்தவர் களில் ஒருவரோ, வயதானவர்களாகிய

உங்களில் யார் ஒருவரோ, உங்களுடைய தாயாரோ அல்லது தகப்பனாரோ அல்லது உங்கள் குழந்தையோ, அவர்கள் அநேக வருடங்களாக உங்களை விட்டு தூரமாய் இருந்து, அவர்கள் நிச்சயமாக எந்த நேரமும் வருவார்கள் என்று நீங்கள் அறிந்திருந்தால், ஏன், நீங்கள் வீட்டை முழுவதுமாக சுத்தப்படுத்தி வைத்திருப்பீர்கள். நீங்கள் ஆயத்தமாகி, திரும்பி வரும் ஒவ்வொரு காரின் வெளிச்சத்திற்காகவும் அந்த சாலை யைக் கவனித்துக் கொண்டிருப்பீர்கள்; அது அவர்களாக இருக்குமோ என்று நினைக்கி றீர்கள்.

**இப்பொழுது, அந்தவிதமாகத்தான் சபையானது கர்த்தருடைய வருகைக்காக விழிப்புடன் இருக்க வேண்டும்: அவர் வந்த உடனே போவதற்காக எல்லாவற் றையும் ஒழுங்குபடுத்திக் கொண்டும், எல்லாவற்றையும் ஆயத்தமாக்கிக் கொண்டும், எல்லாவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டும், ஆயத்தமாய் இருக்க**

**வேண்டும்; ஏனென்றால் அது ஒரு கண்ணிமைப்பொழுதில் இருக்கும்.** கண்ணிமைப்பதற்கு உங்களுடைய கண் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளுகிறது என்பதை சற்று முயற்சித்துப் பாருங்கள். அவ்வளவு சடுதியாக சபையின் எடுத்துக் கொள்ளப்படுதல் சம்பவிக்கும்.

---

# இந்த ஜனங்கள் மனந்திரும்பாவிட்டால், நியாயத்தீர்ப்பு ஜனங்களின் மேல் வருவது நிச்சயமென்று ஆமோஸ் முன்னுரைத்தான் என்று நாம் காண்கிறோம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0724 தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை

42. நாம் மறுபடியும் என்ன காண்கிறோம் என்றால், ஆமோஸ்... நான் இந்த ஆமோஸின் பேரில் பிரசங்கித்திருக்கிறேன். நீங்கள் எப்பொழுதாவது ஆமோஸின் வரலாற்றைப் படிக்க விரும்பினால், அது நல்ல ஒரு வரலாறு. நீங்கள் ஆமோஸின் வரலாற்றைப் படியுங்கள், ஆமோஸ் முதலாம் அதிகாரம். நியாயத் தீர்ப்பு வருவதற்கு முன்பு எச்சரிக்கை விடுக்கப்படுவதற்கு இதோ வேறொரு உதாரணம், அவன் எச்சரிக்கை விடுக்க விருந்த அந்த பட்டினத்தில் யூதர் கூட்டத்தினர் இருந்தனர். அவர்கள் எல்லோரும் ஒருவிதம் வழிவிலகியிருந்தனர். அது ஒரு பெரிய சுற்றுலா ஸ்தலமாக விளங்கியது.

இன்று காலையில் அவனைக் குறித்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். அவனுடைய வழுக்கை மண்டை மலையின் உச்சியை அடைந்து, அவனுடைய சிறு வயோதிப கண்கள், அந்த மகத்தான தேசத்தின் பாவத்தை கண்டபோது குறுகியிருக்கும் என்று நினைக்கிறேன். அவனுடைய வெள்ளை தாடியை அவன் தன் விரல்களினால் இப்படி வருடியிருப்பான். என்னே ஒரு காரியம்! அவன் எங்கிருந்து வந்தானென்று யாருக்குமே தெரியாது. அந்த தீர்க்கதரிசிகளை யாருமே அறியார்கள். அவர்கள் எங்கிருந்தோ எழும்பி, அதேவிதமாக சென்று விடுகின்றனர்.

43. ஆமோஸ் நகரத்துக்குள் சென்று, “கர்த்தர் உரைக்கிறதாவது! மனந்திரும்புங்கள், இல்லையேல் அழிந்து போங்கள், தேவன் இந்த நகரத்தை அழித்துப் போடுவார். நீங்கள் உங்கள் சத்துருவுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டீர்கள்.

உங்கள் சத்துருவுடன் நீங்கள் சமாதான மாயிருப்பதாக எண்ணிக் கொண்டிருக் கிறீர்கள். ஆனால் அசீரியர்கள் தங்கள் சேனைகளை கூட்டிக் கொண்டிருக்கின் றனர். நீங்கள் இருவரும் ஒருமித்திருந்தா லொழிய நடந்து செல்ல முடியாது. அவ்வளவுதான்" என்றான். நாம் பிரிந்து வர வேண்டுமென்று தேவன் விரும்புகி றார். நாம் உலகத்திலிருந்து பிரிந்து வர வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஒரே நேரத்தில் நாம் உலகத்துடனும் தேவனுடனும் வாழத் தலைப்படக் கூடாது; இப்பிரஞ்சத்துக்கு ஒத்த வேஷத்தை தரித்துக் கொண்டு தேவனுடன் வாழ முடியாது. நீங்கள் இவ்விரண்டில் ஏதாவது ஒன்றுடன் வாழ வேண்டும், நீங்கள் இவ்விரண்டில் ஏதாவதொன்றை விசுவா சிக்க வேண்டும்.

44. இந்த ஜனங்கள் மனந்திரும்பா விட்டால், நியாயத்தீர்ப்பு ஜனங்களின் மேல் வருவது நிச்சயமென்று ஆமோஸ்

முன்னுரைத்தான் என்று நாம் காண்கிறோம். (என்னே, அது எவ்வளவு நன்றாக நமது நாளுடன் பொருந்துகிறது). இந்த மகத்தான நகரத்தை நாம் மறுபடியும் பின்னிட்டு நோக்கிப் பார்க்கும்போது, அதன் பொருளாதாரம் சிறந்த நிலையில் இருந்தது, அவர்களுக்கு எல்லாமே இருந்தது, அது செழித்திருந்தது. அவர்கள் செழிப்புற்றிருந்ததனால், அவர்கள் தேவனுடைய சித்தத்தில் இருந்ததாக எண்ணியிருந்தனர். செழிப்புக்கு தேவன் எப்பொழுதுமே காரணம் அல்ல என்று அவர்கள் கண்டு கொண்டனர். இல்லை, தேவன். சில நேரங்களில் சபைகளில் செழுப்புண்டாகும் போது, அது அவர்களை தேவனிடமிருந்து அகற்றிவிடுகிறது.

45. உங்களுக்குத் தெரியுமா, ஒரு சமயம் தேவன் இஸ்ரவேலரை நோக்கி, “நீ வயலில் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன்னை ஜலத்தினால் முழுக்காட்டி உள்ளே கொண்டு வந்தேன்”, அவருடைய

சொந்த பிள்ளையாயிருக்க. "ஆனால் நீ வளர்ந்து பெரியவளாகி, மகா சௌந்தரிய வதியான போது, நீ வழிப்போக்கருடன் வேசித்தனம் பண்ணினாய்" என்றார். (எசே. 16: 6,9,15). பாருங்கள்? "நீ ஏழை யும் தரித்திரமுமாயிருந்தபோது, என்னை சேவித்தாய். நான் உன்னை ஆசிர்வதித்து உனக்கு ஏராளமாக கொடுத்தபோது, நீ சோரம் போனாய்", அது உண்மையென்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒ, என்னே! நாம் என்ன காண்கிறோம் என்றால், இந்த தீர்க்கதரிசி ஆமோஸ் அந்த தேசத்துக்கு விரோதமாய் கூக்குரலிட்டான். அவன் ஒரு ஏர் உழவன் அவன் அவர்களுக்கு விரோதமாய் தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்கள் தேவனுடன் சரியாக ஆகா விட்டால், அவர்கள் கூட்டாளியாக சேர்த்துக் கொண்டுள்ள அவர்களுடைய சத்துருவே அவர்களை அழித்துப் போடு வான் என்றான்.

46. பெருமையுள்ள நமது அமெரிக்கா வும் தேவ கோபாக்கினைக்குத் தப்பித்துக் கொள்ளப் போவதில்லை. இங்கு நான் ஒரு நாள் பேசினது போல, இங்குதான் நான் அதைக் குறித்து பேசினேன் என்பது உறுதி எல்லாமே முடிவுக்கு வந்துவிட்டது. இனி முன்னேறக் கூடியது எதுவுமேயில்லை. அரசியலில் முன்னேற்றம் இருக்காது, அது போய்விட்டது. சமுதாய வாழ்க்கையில் நீங்கள் முன்னேற்றத்தைக் காண முடியாது, ஏனெனில் அது மிகவும் ஒழுக்கக்குலைச் சலாகிவிட்டது. அதை நீங்கள் முன்னேறச் செய்ய முடியாது. நீங்கள் எதிலும் நம்பிக்கை வைக்க முடியாது. "சபையைக் குறித்து என்ன?" நல்லது, சபையைக் குறித்து நீங்கள் ஒன்றுமே செய்ய முடி யாது. அது சம்பிரதாய முறைமை யாகிவிட்டது. அவர்கள் ஒரு பானை கூழுக்காக தங்கள் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுவிட்டனர். அவர்களுக்கு நியாயத் தீர்ப்பு காத்திருக்கிறது. பரிசுத்த

ஆவியானவர் இந்த தேசத்தைக் கடந்து சென்று, அற்புதங்களையும் அடையாளங் களையும் செய்தார். அவர்களோ அவரு டைய கிருபையை தொடர்ந்து இகழுகின் றனர். அவர் தம்மை உறுதிப்படுத்தி, அவருடைய மகத்தான உறுதிப்படுத்தலின் மூலம், அவர் இந்நாளில் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தை என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார். அவர்களோ அதைப் புறக்கணித்துக் கொண்டேயிருக்கின்றனர். பாருங்கள்? இப்பொழுது ஒன்றுமே விடப் பட்டிருக்கவில்லை. நீங்கள் எப்பொழு துமே தேவனிடம் அப்படி செய்து கொண்டிருக்க முடியாது. பாருங்கள்?

47. சரி, நாம் காண்பது என்னவெனில், அவர் முதலாவதாக தமது தீர்க்கதரிசிகளை எச்சரிக்கையுடன் அனுப்புகிறார். அவர் தமது வழியை, செய்ய முறையை மாற்றிக் கொள்வதில்லை. அவர்களை அவர் எச்சரிக்கும் போதே தாக்குவதில்லை. இதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று

விரும்புகிறேன். தேவன் எச்சரிக்கிறார். ஆனால் அவர் எச்சரிக்கும் அதே நேரத்தில் தாக்குவதில்லை. அவர் எச்சரிக்கை அனுப் பும் போதே தாக்காததால், தீர்க்கதரிசி கேலி செய்யப்படுகிறான். அவர்கள், "உனக்கு அது கிடையாது. நீ பொய் சொன்னாய். நீ சொன்னது உண்மையல்ல", என்கின்றனர். அதேவிதமாக அவர்கள் ஏசாயாவையும் கூட சொல்லியிருப்பார்கள். அவன் ராஜா விடம் சென்று, "நீர் மரிக்கப் போகிறீர்" என்று சொல்லிவிட்டு, மறுபடியும் வந்து, "இல்லை, அவர் உயிர்வாழப் போகிறார்" என்று கூறினதைக் குறித்து அவன் என்ன நினைத்திருப்பான் என்று நினைக்கிறீர்கள்?

48. யோனா தெருக்களின் வழியாக சென்று, "ஓ, இந்தப் பட்டினம் இத்தனை நாட்களுக்குள், நாற்பது நாட்களுக்குள் அழிக்கப்படும்" என்று சொல்லிவிட்டு, தேவன் அதை செய்யாமலிருந்தாரே, அதைக் குறித்து என்ன? பாருங்கள், நீங்கள் கவனிக்க வேண்டும், தேவன் எச்சரிக்கும்

போது, அவர் தாக்குவதில்லை. ஆனால் அவர் ஆனால் ஒரு காரியம், அப்பொழுது தீர்க்கதரிசி கேலி செய்யப்படுகிறான். அவன் தேவனுடைய வார்த்தையைக் கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசி யாயிருந்து தேவனுடைய அடையாளங்கள் அவனை உறுதிப்படுத்துமானால்; தீர்க்க தரிசிகள் உறுதிப்படுத்தப்படுவார்கள் என்று தேவன் உரைத்துள்ளார் (இந்த மனிதர் அவ்விதமே இருந்தனர்). பாருங்கள், அப்படியானால் அது அவனுடைய வார்த் தையல்ல, அது தேவனுடைய வார்த்தை, அது நிறைவேறும். அது தேவனுடைய வார்த்தையாயிருக்குமானால், அது நிறை வேறியே ஆகவேண்டும். அதை நிறுத்தக் கூடியது ஒன்றே ஒன்று மாத்திரமே, அது விரைவாக மனந்திரும்புதலே.

49. கவனியுங்கள், ஆமோஸ் தன் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதைக் காண உயிரோடிருந்தான். ஆனால் ஆமோஸ் அந்த நகரத்துக்கு விரோதமாய் தீர்க்க

தரிசனம் உரைத்த போது அது எப்படி நடக்குமென்றும், எவ்வாறு சீரியர்கள் அதில் நுழைந்து அதை கைப்பற்றத் தேவன் செய்வார் என்றும், அவர்களு டைய கேடான வழிகளே அவர்களைத் தின்று போடும் என்றும் தீர்க்கதரிசனம் உரைத்த பிறகு, அது இப்பொழுது உரைக்கப்படுமானால்... நான் வேதவாக்கி யங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். நான் சரியாக கணக்கிட்டிருந்தால், ஆமோஸ் தீர்க்கதரிசனம் உரைத்து ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகட்குப் பிறகு தான் அது நிறைவேறினது. இப்பொழுது, நீங்கள் அதைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? ஆமோஸ் உரைத்த தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்கு முன்பு ஒரு முழு சந்ததியே கடந்து சென்றது. ஆனால் இங்கே நீங்கள் படிப்பீர்களானால், அவன் உரைத்த தீர்க்கதரிசனம் வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறினதாக அது கூறுகிறது. பாருங்கள்? யோவான்,

தான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் எழுதினவைகளைக் கண்டான். அது அவனுடைய காலத்தில் நடக்கவில்லை. ஆனால் அது அப்படியே நிறைவேறி வருவதை நாம் காண்கிறோம். பாருங்கள்? தானியேல் அவனுடைய காலத்தைக் குறித்தும், படிப்படியாக வரப்போகும் காலங்களைக் குறித்தும் தீர்க்கதரிசனம் உரைத்தான். ஆனால் அவை நிறைவேறுவதை காண அவன் உயிர்வாழவில்லை. அவர், “தானியேலே, முடிவு வரும் மட்டும் போயிரு. இந்தப் புத்தகத்தை முத்திரைபோடு, நீ இளைப்பாறிக் கொண்டிரு. ஆனால் அந்த நாளிலே நீ எழுந்திருப்பாய்” என்றார். பாருங்கள்? இப்பொழுது பாருங்கள்... நீங்கள் எப்பொழுதுமே... தேவன்... தீர்க்கதரிசனம் உரைத்தவுடனேயே தாக்குவதில்லை. நான் கூறின வண்ணமாக, ஆமோஸ் உரைத்த தீர்க்கதரிசனம் ஐம்பது ஆண்டுகள் கழித்து

நிறைவேறினது. ஆனால் அது நிறை வேறினது!



**அப்பொழுது அவள், "பிரசங்கியாரே, நீர் சரியாகக் கூறியிருந்தீர் என்றே நான் உமக்குக் கூற விரும்புகிறேன்" என்றாள். மேலும் அவள், "நான் அப்பொழுது கடைசி முறையாக பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தினேன்" என்றுக் கூறினாள்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-0121E – ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

245 இப்பொழுது நான் ஜெபித்துக்கொண்டிருக்கையில், நீங்கள் உங்களுடையத் தலைகளை வணங்கியவாறே இருங்கள். உங்களுடையக் கரத்தை உயர்த்தியிக்கிற நீங்கள் ஒவ்வொருவரும், நீங்கள் அதனோடு ஆழ்ந்த உத்தமத்தோடு இருப்பீர்களேயானால், அப்பொழுது நீங்கள் அதை உண்மையாக பொருளுணர்ந்துக் கூறுங்கள். அதாவது நீங்கள் தவறாயிருந்து வருகிறீர்கள் என்பதை ஜனங்கள் அறிந்துகொள்வதனால் நீங்கள் வெட்கமடைகிறதில்லையே! எப்படியாயினும் நீங்கள் அவர்களோடு அங்கே நியாயத்தீர்ப்பிலே நிற்க வேண்டியவர்களாயிருக்கப் போகிறீர்களே. நீங்கள் தவறாயிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள் என்ற

திடநம்பிக்கையைத் தேவன் உங்கள் மீது போதுமான அளவு வைத்துள்ளாரே.

246 இங்கே அண்மையில் நான் அந்தவிதமான ஒரு காரியத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது நான் அங்கு பின்னால் நின்றுகொண்டிருந்த ஓர் வாலிபப் பெண்மணியினிடத்தில் பேசினேன். ஒரு ஊழியக்காரரின் மகளாயிருந்த அவளோ அசிங்கமாகக் காணப்பட்டாள். அவள் என்னை சபைக்கு வெளியே சந்தித்தாள், அவள் என்னை கடுமையாக வீசியெறிந்து பேசாதிருந்திருந்தால் நலமாயிருந்திருக்குமே! ஆனால் அவளோ, "நீர் அறிவற்றவராயிருக்கிறீரே" என்றாள். சிறு பெண், திமிரான அவமதிப்புப் பண்புடையவளாய், உதட்டுச் சாயமும் பூசிக் கொண்டிருந்தாள்; மேலும் குட்டையாகத் தலைமுடியை வெட்டிக் கொண்டவளாயிருந்தாள். அப்பொழுது அவள், "அதைக் குறித்து என்னிடத்தில் பேச

எனக்கு யாராவது வேண்டுமென்றால், அப்பொழுது நான் கொஞ்சம் அறிவுத்திறனுள்ள யாரையாவது பயன்படுத்துவேன்" என்றாள். அதன்பின்னர் மீண்டும், "அது போன்ற ஒரு காரியத்தைப் பிரசங்கிக்க என்னுடைய தகப்பனாரின் பிரசங்கபீடத்திற்கு நீர் ஒருபோதும் வரவே வேண்டாம்" என்று கூறினாள்.

247 அப்பொழுது நான், "உன்னுடையத் தந்தை, ஒரு நல்ல நேர்மையான பாப்டிஸ்டு பிரசங்கியாராக இருந்தாலும், அவர் அதற்கு எதிராக பிரசங்கிக்கமாட்டார் என்ற எண்ணங்கொண்டே நீ என்னிடத்தில் சொல்லுகிறாயா?" என்று கேட்டேன்.

அதற்கு அவளோ, "அவர் உங்களை இங்கு வரும்படிக்கு கூலிக்கு அமர்த்தவில்லையே..." என்று கூறினாள்.

அப்பொழுது நானோ, "அவர் என்னைக் கூலிக்கு அமர்த்தவில்லைதான். ஆனால்

நானோ அழைப்பின் மூலமே வந்தேன்" என்று கூறினேன்.

அவளோ மறுபடியும், "நான் உம்மை ஒருபோதும் அதற்காக மன்னிக்கவே மாட்டேன்" என்றாள்.

248 அப்பொழுது நான், "அது உன்னைப் பொறுத்ததாயிருக்கிறது. நான் சுவிசேஷத்தை மாத்திரமே பின்பற்றினேன்" என்று கூறினேன். அங்கே வீசின மெல்லிய காற்றில் ரோஜா மலர்களின் புதர் செடிகளோ அசைந்தாடிக் கொண்டிருந்தன. அழகான வாலிபப்பெண்.

249 கொஞ்சங்கழித்து, ஏறக்குறைய ஓர் ஆண்டு கழித்து, நான் அந்தப் பட்டிணத்தினூடாகக் கடந்து சென்றேன். அப்பொழுது நான் அந்த அதே வாலிபப் பெண்மணி தன்னுடைய அரைப்பாவாடையானது கீழே தொங்கிக்கொண்டிருக்க, ஒரு சிகெரேட்டைப் புகைத்துக்கொண்டு வீதியில்

சென்று கொண்டிருப்பதைக் கண்டேன். நான், “அது சகோதரன் *இன்னார்—இன்னாருடைய* மனைவி இல்லை மகளாயிற்றே” என்று யோசித்துப் பார்த்தேன். அப்பொழுது என்னால் அவளண்டை செல்ல முடியுமா என்று பார்க்க நானும் அந்த வீதியில் நடந்து சென்றேன்.

250 அப்பொழுது அவள் என்னை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு, இந்த சிகெரெட்டை புகைத்து, அதன் புகையை அவளுடைய மூக்கினூடாக ஊதினாள். பின்னர் அவள், “ஹலோ, பிரசங்கியாரே” என்று தேவபக்தியற்ற கொச்சையான வார்த்தைகளைக்கூறி அவ்விதமாய்க் கூப்பிட்டாள்.

அதற்கு நானோ, “இந்த நிலைமையா?” என்றேன்.

உடனே அவள், “என்னுடைய சிகெரேட்டை எடுத்து புகைத்துப்பார்.

ஆண்மை ஆற்றலோடு செயல்படும் ஒருவராயிரும்” என்று கூறினாள்.

அதற்கு நானோ, “நீ உன்னைக் குறித்தே வெட்கப்படவில்லையா?” என்று கேட்டேன்.

251 அப்பொழுது அவளோ தன்னுடைய சட்டைப் பையில் வைத்திருந்த சிகெரெட்டு அட்டைப் பெட்டியை கைவிட்டு எடுத்து, “உனக்கு வேண்டுமானால் ஒரு சிகெரெட்டை எடுத்துப் புகை” என்று கூறினாள்.

252 அதற்கு நானோ, “உனக்கு அவமானம். தேவனுடைய ஊழியக்காரனுக்கு ஒரு சிகெரெட்டு கொடுப்பதென்பது உனக்கு அவமானமே” என்று கூறினேன்.

பின்னும் அவள், “உனக்கு வேண்டுமானால் என்னுடைய புட்டியிலிருந்து சற்று மது அருந்து” என்றாள்.

அதற்கு நான், “தயவு செய்து அதைக் கூறாதே” என்றேன்.

253 அவள் என்னையே உற்றுப்பார்த்தாள். என்னால் அழுவதை அடக்க முடியவில்லை, ஏனென்றால் அவளுடையத் தந்தை ஒரு நல்ல மனிதனாயிருக்கிறார். நான் அவளை நோக்கிப் பார்த்தேன். நானோ, “ஓ, என்னே! அவளுக்கு ஏராளமான நேரம் இருப்பதாக எண்ணிக்கொண்டாளே” என்று நினைத்தேன்.

254 அதன்பின்னர் நான் நடக்கத் துவங்கினேன். என்னுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிவதை என்னால் நிறுத்த முடியவில்லை. நான் தொடர்ந்து நடந்தேன். அப்பொழுதும் அவள், “ஒரு நிமிடம் நில்லுங்கள்” என்றாள்.

அதற்கு நானோ, “சொல், என்ன அம்மணி?” என்று கேட்டேன்.

255 அவள் பின்னால் நடந்து வந்தாள். ஜனங்கள் கடந்து சென்றுகொண்டிருந்த அந்த வீதியில் அவளிடத்தில் பேசுவது

ஏறக்குறைய ஒரு அவமானமாயிருந்தது. அவள் நடந்து அருகில் வந்தாள். பின்னர் அவள், "அன்றிரவு நீர் என்னிடத்தில் என்னக் கூறினீர் என்பது உமக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

அதற்கு நானோ, "எனக்கு எப்பொழுதுமே நினைவிருக்கும்" என்றேன்.

256 அப்பொழுது அவள், "பிரசங்கியாரே, நீர் சரியாகக் கூறியிருந்தீர் என்றே நான் உமக்குக் கூற விரும்புகிறேன்" என்றாள். மேலும் அவள், "நான் அப்பொழுது கடைசி முறையாக பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தினேன்" என்றுக் கூறினாள். இப்பொழுது அந்த ஸ்திரீ என்னிடத்தில் கூறின குறிப்பிடத்தக்க குற்றம் இதுதான். நான் அதை உயிரோடிருக்கும் வரை மறக்கவே மாட்டேன். அவள், "அவர் அன்றிரவு என்னோடு ஈடுபட்டுக்கொண்டிருந்தார். ஆனால்" என்று கூறி, "நான் அவரை அந்த நேரத்தில்

புறக்கணித்தபோது, அதுவே என்னுடையக் கடைசி நேரமாயிருந்தது” என்றாள். அவள் தொடர்ந்து, “அது முதற்கொண்டே என்னுடைய இருதயம் மிகவும் கடினமாயிருந்து கொண்டு வருகிறது; நான் தேவனுக்காகவோ, சபைக்காகவோ அல்லது மற்றெந்த காரியத்திற்காகவோ கவலைப்படுகிறதே இல்லை. நான் என்னுடைய தந்தையினிடத்தில் ஒவ்வொரு நாளும் முரட்டாட்டம் பண்ணிக்கொண்டிருக்கிறேன்” என்று கூறினாள். மேலும் அவள், “என் தாயினுடைய ஆத்துமா ஒரு பணியாரத்தைப் போன்று நரகத்தில் வறுத்தெடுக்கப்படுவதையும், அது நகைக்கப்படுவதையும் என்னால் கான முடிகிறது” என்றும் கூறினாள். அதுவே கடைசி முறையாக பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தினதாகும். அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

257 நாம் ஒரு புறாவின் சிறகுகளில் பரலோக வீட்டிற்குச் செல்வோமாக. நாம் மணவாட்டியாயிருப்போமாக. நீங்கள் தவறாயிருந்தால், இப்பொழுதே உங்களுடைய இருக்கையிலிருந்து எழும்புங்கள். இங்கே மேலே வாருங்கள். இங்கே பீடத்தண்டை நின்று, “நான் தவறாயிருந்து வந்துள்ளேன், சகோதரன் பிரான்ஹாம், நான் எரிச்சலான மனநிலையுடையவனாய் இருந்து வந்திருக்கிறேன். இல்லையென்றால் நான்—நான்—நான் தேவபக்தியற்றவனாய் வாழ்ந்து வந்திருக்கிறேன். நான்—நான் செய்யக் கூடாத இந்தக் காரியங்களை நான் செய்கிறேன். சகோதரன் பிரான்ஹாம், நான் *இதை*, *அதை* அல்லது *மற்றதைச்* செய்திருக்கிறேன். நான் பொய்யுரைத்தலில் குற்றவாளியாய் இருக்கிறேன். நான் திருடுகிறதில் குற்றவாளியாயிருக்கிறேன். நான் வேறேதோ ஒரு காரியத்தில் குற்றவாளியாயிருக்கிறேன். நான் சேவிக்க வேண்டியவிதமாக தேவனை

சேவித்திருக்கவில்லை. நான் என்னைக் குறித்தே வெட்கப்படுகிறேன். நான் என் ஜீவியத்தை சரிப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். எனவே சகோதரன் பிரான்ஹாம், நீர் இன்றிரவு இங்கே எனக்காக ஜெபிக்கமாட்டீரா?" என்று கூறுங்கள். நான் அதைச் செய்ய சந்தோஷப்படுவேன்.

258 தேவன் சுகவீனம், குருடு, துயரப்படுகிறவர்களுக்கான என்னுடைய ஜெபங்களைக் கேட்டு பதிலளிப்பாரானால், அப்பொழுது அவர் பாவிக்கான ஒரு ஜெபத்தையும் நிச்சயம் கேட்பார். நீங்கள் மணவாட்டியின் பாகமாயிருக்கும்படிக்கு இன்றிரவே வரமாட்டீர்களா? நீங்கள் வரும்படியாக நான் உங்களை அழைக்கிறேன்.

**62-0121E — ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்**

Rev. William Marrion Branham

# தேவனுடைய கடுங்கோபத்திலிருந்து உண்மையிலேயே தப்பிக்கொள்ள விரும்புகிறவர்களுக்காக தேவன் எப்போதுமே ஒரு வழியை உண்டாக்குகிறார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 53-12-01 தேவனால் அருளப்பட்ட பாதை

51. இப்பொழுது, நாம் அந்த நேரத்தை குறித்து எண்ணிப்பார்க்க முடியும்.... மேலும் - மேலும் எப்போதுமே, தேவ னால் அருளப்பட்ட வழியை ஏற்றுக் கொள்கிற மனிதன், எப்போதுமே விடாப் பிடியுடைய ஒரு மதவெறியனாக கீழே நோக்கிப் பார்க்கப்படுகிற ஒரு மனித னாகவே இருக்கிறான். அவன் எப்போ துமே, எல்லா காலங்கள் தோறும், உலகத் தால் ஒரு மதவெறியனாக எண்ணப் பட்டான். தேவனுடைய மார்க்கமும், இந்த உலகத்திற்கான இரட்சிப்பும், எக்காலத்தி லும், ஒருபோதும் இந்த உலகத்தின் ஜனங்களிடம் பிரபலமாக இருந்ததே கிடையாது, இல்லவே இல்லை, எப்போ தும் அவ்வாறு இருந்ததேயில்லை. அவர், "நீங்கள் அன்புகூர்ந்தால்..... என்றார்.

உலகமானது தன்னுடையவர்களை அறிந்துள்ளது. அது சரியே. "நீங்கள் உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூர்ந்தால், தேவனுடைய அன்பு உண்மையாகவே உங்களுக்குள் இல்லை." எனவே விசுவாசத்தினாலே நடப்பது என்பது, எப்போதுமே கடினமாக இருந்து வருகிறது, போராட்டமான வழியாக இருக்கிறது. ஆனால், அது அந்த மனிதனுக்கு கடினமான போராட்டமாக இருப்பதில்லை. உலகம் அவர்களை நோக்கிப் பார்த்து, "நல்லது, அந்த ஜனங்கள் நிச்சயமாக பைத்தியம் பிடித்தவர்களாகத்தான் இருக்க வேண்டும்; அவர்கள் வேடிக்கையாக நடந்த கொள்கிறார்களே" என்று கூறுகிறார்கள். அது எப்போதுமே அந்த விதமாகத்தான் இருந்து வருகிறது, ஏனென்றால் அவன் தனக்காக தேவன் அருளியிருக்கிற வெளியே செல்லும் அந்த வழியை ஏற்றுக்கொண்டு விட்டான்.

52 ஜலப்பிரளயக்காலத்திற்கு முன்பிருந்த உலகத்தில், நம்முடைய தகப்பனாகிய நோவா, அவன், அநேகமாக, அங்கே வெளியிலிருந்து, ஒருநாள் பிற்பகல், தன்னுடைய வேலையை விட்டு வீட்டிற்கு வந்து, அவன் ஒரு விவசாயியாக இருந்தான், அவன் தன்னுடைய மனைவியிடம், கர்த்தர் இன்று என்னிடம் பேசி, போய் ஒரு பெரிய பேழையைக் கட்டும்படி என்னிடம் கூறினார்" என்று சொல்லுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா.

53. "நல்லது," அவள், "நோவாவே, உங்களால் எப்படி ஒரு பேழையைக் கட்ட முடியும்? நீர் ஒரு விவசாயி ஆயிற்றே. நீர் எப்படி ஒரு பேழையை எப்பொழுதாவது செய்ய முடியும்? " என்று கூறியிருப்பாள்.

54. "நல்லது, மழை பெய்யப் போகிறது என்று தேவன் சொல்லியிருக்கிறார், முழு உலகத்தின் மேலும் வெள்ளப்பெருக்கு

வரப்போகிறது, எல்லாரும் தண்ணீரில் மூழ்கி மரிக்கப் போகிறார்கள். நான் அவருடைய வார்த்தையைப் பின்பற்றி னால், நான் அதிலிருந்து தப்பித்துக்கொள் வேன் என்று அவர் என்னிடம் சொன்னார்."

55. அந்தவிதமாகத்தான் நாம் எப்போதுமே தப்பித்துக்கொள்ளுகிறோம் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தேவனுடைய காரியத்திட்டத்தைப் பின்பற்றுவது தான் அந்த வழியாகும். நாம் எப்பொழுதாவது அதைச் செய்யக் கூடிய ஒரே வழி அதுதான்.

56. நோவா அங்கே வெளியிலிருந்து இந்தப் பேழையை கட்டிக் கொண்டிருப் பதை (building away) என்னால் காண முடிகிறது, அது வெளியே ஒரு பெரிய உலர்ந்த பூமியின் நடுவில் ஆயத்தமாகிக் கொண்டிருந்தது, அங்கு ஒருபோதும் வானத்திலிருந்து ஒரு மழைத்துளியும் ஒருபோதும் விழுந்ததே கிடையாது.

அங்கே ஒருபோதும் மழையாக எதுவுமே வானங்களிலிருந்து வெளியே வந்து (பெய்ததே கிடையாது, வானத்தில் ஒருபோதும் ஒரு மேகமாவது ஒருபோதும் இருந்ததில்லை; இருப்பினும், நோவா அங்கே வெளியே ஒரு பேழையைக் கட்டிக் கொண்டிருந்தான் (building away). அது எவ்வளவு முட்டாள் தனமாக காணப்பட்டிருக்கும் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? ஏன், மாம்ச சிந்தைக்கு, அந்த மனிதன் பைத்தியக்காரனாகத்தான் இருந்தான்.

57. பிற்பகல் வேளையில், ஜனங்கள் தங்கள் வேலையிலிருந்து வீட்டுக்கு வந்து, பட்டணத்தில் இருந்து, "சொல்லுங்கள், அங்கே வெளியே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் அந்த மழைக் கதையை நீங்கள் நம்புகிறீர்களா? அந்தக் கிழட்டு பித்து கொள்ளியைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? ஏன், நீங்கள்

எப்பொழுதும் கண்டதிலேயே அது மிகவும் பைத்தியம் பிடித்த ஆளாக இல்லையா? அங்கே வெளியில் ஒரு - ஒரு பேழையை கட்டிக் கொண்டு (building away), வானத்திலிருந்து வெள்ளம் விழப் போகிறது என்று சொல்லிக் கொண்டிருக் கிறானே, ஏன், அந்த மனிதனுக்கு பைத்தியம் தான். அங்கே மேலே எதுவும் கிடையாது. தேவன் எப்போதுமே இங்கே கிழே... இவ்விதமாக, நீர்ப்பாசனம் மூலமா கவே தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார். அங்கே அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது" என்று கூறிக் கொண்டிருப் பதை என்னால் கேட்க முடிகிறது.

58. ஆனால் அதுதான் தப்பிக்கொள் ளும்படியான வழி என்று தேவன் அவ னிடம் கூறினார், அவன் கட்டிக்கொண் டிருக்கும் (building away) அந்த வழிதான் தப்பிக்கொள்ளும் வழியாக இருந்தது. "நோவாவின் நாட்களில் நடந்தது போல,

மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்" என்று இயேசு கூறியிருக்கிறார். ஜனங்களுக்குப் பைத்தியமாகத் தோன்று கிற ஒரு திட்டம் பூமியின் மேல் இருக்கும் (அது சரியே), அது அப்படியே முட்டாள் தனமாக இருக்கும். ஆயினும், அது தேவனுடைய திட்டமாக இருக்கிறது, ஏனென்றால் அவர்கள் தேவனை அவ ருடைய வார்த்தையில் எடுத்துக் கொண் டிருந்தார்கள். அவர்கள் ஒரு பேழையைக் கட்டிக் கொண்டிருப்பார்கள் (building away), அந்தப் பேழை இயேசு கிறிஸ்து வாக இருக்கிறது. அது சரியே. அது சரியே, அவருக்குள் மனமாற்றமடைய முயற்சித்தல்.

59. இப்பொழுது... தப்பிக்கொள்ளும் படியாக அங்கேயிருந்த ஒரே வழி அதுதான் என்று தேவன் நோவாவிடம் கூறினார். அது மாத்திரமே ஒரே வழியாக இருந்தது. அவன் 120 வருடங்கள்

பிரசங்கம் பண்ணினான். ஜனங்களோ அவனை அசட்டை செய்தது, அவனைப் பார்த்து நகைத்து, அவனைக் கேலி செய்து, பரிகசித்து, ஏளனம் செய்தார்கள்.

60. நோவாவின் நாட்களில் நடந்தது போல, புசித்தும்... அவர்கள் எப்படிப் பட்ட, எந்தவிதமான ஒரு உலகத்தைக் கொண்டிருந்தார்கள்? அப்படியே இப்பொ ழுது அவர்கள் செய்து கொண்டிருப்பது போன்று, அவர்கள் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும், பெண்கொடுத்தும், எல்லாவித வித்தியாசமான காரியங் களையும் உடையவர்களாக இருந்தார்கள். நமக்கு இப்பொழுது இருக்கும் நாகரி கத்தைக் காட்டிலும் உயரிய நாகரிகத்தை கூட அவர்கள் கொண்டிருந்தார்கள். அது அவ்வண்ணமாக இருக்கிறது என்று நீங்கள் நினைக்கவில்லை என்றால், முயற்சித்துப் பாருங்கள்.... அங்கேயிருக்கும் கூர்நுனிக் கோபுரத்தை நாம் மீண்டும் உண்டாக்க முயற்சித்துப் பார்ப்போம். நாம் அதையே,

அல்லது பெண் நர சிங்க உருவச் சிலையையோ, (sphinx) அல்லது அந்த வரிசையிலுள்ள ஏதோவொன்றைக் கட்ட முயற்சி செய்து பார்ப்போம். எகிப்தியர்கள் பிணங்களைப் பதனிட்டு வைத்திருந்த, தங்களுடைய பிணம் பதனிடல் (embalming) போன்ற ஒரு மம்மியை செய்ய முயற்சித்து, நாம் அந்நாளின் நாகரிகத்திலிருந்து எவ்வளவு- எவ்வளவு தூரமாக இருக்கிறோம் என்று கண்டு கொள்ளுங்கள். நாம் அதிலிருந்து அப்பால் தொலைவில், தூரத்தில் இருக்கிறோம்.

61. இதைக் காட்டிலும் ஒரு உயரிய நாகரிகம் இருந்த ஒரு நாளில், அங்கே வெளியிலிருந்த ஒரு மனிதன் ஒரு பேழையைக் கட்டிக் கொண்டிருந்து, மழை பெய்யப் போகிறது என்று கூறினான், வானங்களில் ஒரு மேகமும் கூட ஒருபோதும் இருந்ததில்லை.... உலகம் இருந்தது முதற்கொண்டு, இரண்டாயிரம்

வருடங்களாக, அங்கே ஒரு மேகமோ, அல்லது இடி முழக்கமோ, மின்னலோ, அல்லது வேறு எதுவுமோ ஒருபோதும் இருந்ததேயில்லை. ஆயினும், அதைச் செய்யப் போவதாக தேவன் அவனிடம் கூறினார். ஏனென்றால் அவருடைய மகத்தான ஆவியானவர் இந்த உலகத்தை அதனுடைய cater-ஐ விட்டு வெளியே தள்ளப் போவதாக இருந்தார், அது அங்கே வெளியேயிருந்து, பின்னோக்கிசாயும்படி செய்யப்போவதாக இருந்தார், ஏனென் றால் மேகங்கள் வர வேண்டியிருந்தது. தேவன் அவ்வாறு கூறியிருப்பாரென்றால், அது இருக்கப் போகிறது என்று தேவன் கூறினவிதமாகவே அது அப்படியே இருக்கத்தான் போகிறது.

62. நோவா பேழையை சரியாகக் கட்டி (built away), கீல்பூசி, அதற்குள்ளே தார் இட்டான்; அந்தக் காரியமானது தண்ணிரில் இருந்து கொண்டிருந்தது

போன்றே. மழை பெய்வது மட்டுமல்ல, ஆனால் முழு உலகத்தையும் வாரிக் கொண்டு போகப் (wash over) போகிற ஒரு ஜலப்பிரளயம் வரப்போவதாக இருந்தது. நோவா தேவனை விசுவாசித்தான், அவன் தேவ எச்சரிப்பு பெற்று, விசுவாசத்தினாலே நடந்து, பேழையைக் கட்டி, தேவனால் அருளப்பட்ட வழியில் வேலை செய்து கொண்டிருந்தான்.

63. என்னே! ஓ, அவன் அடித்துக் கொண்டிருக்கையில் (beating away), கடைசி பாகம் ஒன்று சேர்க்கப்பட்டு, இணைக்கப்படுகையில், ஜனங்கள் சுற்றிலும் நின்றபடி, நகைத்து, "ஏய், அந்தப் பெரிய பழங்கால காரியத்தோடு நீ என்ன செய்யப் போகிறாய்? ஏன் நீ.." என்று கூறிக்கொண்டிருப்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. அவர்கள் அவனைப் பார்த்து கேலி செய்யவும் மற்றும் எல்லாவற்றையும்

செய்து கொண்டிருந்தார்கள். அவனோ அப்படியே கட்டிக் கொண்டிருந்து (built away), அதனுடைய முனையில் நின்று, அவனால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு கடினமாகப் பிரசங்கம் பண்ணிக் கொண் டிருந்தான்.

64. பிறகு முடிவாக, தேவன் அதைக் குறித்து களைப்படைந்த போது, அதோ ஒரு நாள் வருகிறது. அப்போது வினோத மான வழக்கத்துக்கு மீறிய உணர்ச்சி பூமியின் மேல் வந்து கொண்டிருப்பதை காண்பதாக என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. சற்றேறக்குறைய இன்று இருப்பது போலவே, எல்லாருமே அமைதியற்றவர்களாய், 'ஏதோவொன்று நடக்கப் போகிறது?" என்கின்றனர். நீங்கள் வெளியே வீதியில் போய், உங்களுக்கு விருப்பமான எந்த பாவியிடமும் பேசிப் பாருங்கள்; நீங்கள் ஒரு மதுக்கடைக்குள் (barroom) செல்லக் கூடுமானாலும்,

ஏதோவொன்று நடக்கப் போகிறது என்று எல்லாருக்குமே தெரிகிறது. சரி. ஏதோ வொன்று நடக்கப் போகிறது. நியாயத் தீர்ப்பு உலகத்தின் மேல் இருக்கிறது, அவர்கள் அதைக் காண்கிறார்கள்.

65. இங்கே வெளியே வயலில் மேய்ந்து கொண்டிருக்கும் ஒரு ஆட்டுக் குட்டியை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா. அந்தப் பரிதாபமான சிறு ஆட்டுக்குட்டியால் எதையும் காண முடியவில்லை, ஆனால் அது அமைதி யற்றதாக உணரத் தொடங்குகிறது, அங்கே ஏதோவொன்று நடக்கப் போகிறது. சரளை மீது நெரித்து நடந்தபடி, அதோ அங்கே புதர்களில், ஒரு சிங்கம் வந்து கொண் டிருந்தது. அதைக் குறித்து ஏதோவொன் றுள்ளது. அதுவால் அதைக் கூற முடியும். ஏதோவொன்று நடக்கப் போகிறது. அதுவால் அந்த சிங்கத்தைக் காண முடியவில்லை, ஆனால் அங்கே ஏதோ

தவறாயிருக்கிறது என்பது அதற்குத் தெரிகிறது.

66. சகோதரனே, அந்த விதமாகத்தான் இன்றும் உள்ளது, இந்த உலகம் போய்க் கொண்டிருக்கும் மிகவும் இருண்டதும், இருளும், பாவமும் மற்றும் காரியங்களுமான இந்த கதம்ப கூளம் (conglomeration) எல்லாவற்றோடும் இன்று ஒரு காட்சி அமைப்பு செய்யப்பட்டுக் கொண்டிருக் கிறது. வெளியே எல்லா காலங்களிலும் எப்பொழுதாவது நடிக்கப்பட்ட மிக மகத் தான நாடகத்திற்கான நாடக மேடையை அவர்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார் கள். இயேசு கிறிஸ்துவின் வருகை. மனிதனால் முடியாது.

67. ஜனங்கள் கடைசி நாளின் ஆவிக்குள்ளாகும் வரைக்குமாக, நம்மால் கடைசி நாளைக் கொண்டிருக்க முடியாது.

ஜனங்கள் சுகமளிக்கும் ஆராதனையின் ஆவிக்குள்ளாகும் வரைக்குமாக, நம்மால்

இங்கே ஒரு சுகமளிக்கிற ஆராதனையைக் கொண்டிருக்க முடியாது. ஜனங்கள் பரிசுத்த ஆவியால் நிறையப்படும் அந்த விதமான ஒரு சூழ்நிலைக்குள்ளாகும் வரைக்குமாக நம்மால் பரிசுத்த ஆவியால் நிறையப்பட முடியாது. அந்த நாளில், பூமியின் மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும்படிக்கு, ஜனங்கள் அந்த சூழ்நிலைக்குள் இருந்தார்கள். புசித்தல், குடித்தல், பெண்கொண்டு, பெண்கொடுத் தல், மற்றும் அதைப்போன்று இவ்விதமான காரியங்கள் எல்லாம் உடைய, அதே சூழ்நிலையில் தான் இன்றும் அவர்கள் இருக்கிறார்கள். நான் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக, தேவனுடைய மகிமை பிரசங்கிக்கப்பட்டும் நிரூபிக்கப் பட்டும் வருகிறது, மேலும் சபையை மகிமைக்குள் எடுத்துக்கொண்டு போகப் போகிற இயேசு கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலின் ஒரு - ஒரு திருஷ்டாந்தமாக

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையானது வைக்கப்பட்டிருக்கிறது. அது சரியே. மனிதர்களோ அதைப் புறக்கணித்து, அதற்கு எந்தக் கவனமும் செலுத்துவதில்லை, ஏனென்றால் அவர்கள் கடைசி நாளில் ஆவிக்குள் இருக்கிறார்கள்.

69. உலகமானது இதைப்போன்றவற்றிற்குள் வர வேண்டியிருக்கிறது. தேவன் ஒரு நீதியான ஜனங்களின் மேலே தம்முடைய கடுங்கோபத்தை ஊற்றினால், அவர் அநீதியுள்ளவராயிருப்பார். அவர்கள் அவரைப் புறக்கணித்து, தூரமாக நடந்து போய்விட்டார்கள், சாத்தான் அவர்களைப் பிடித்துக் கொண்டான். அதோ அந்த சமயத்தில் அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் தேவனோ இன்று ஒரு அருளப்பட்ட வழியை, தப்பிக்கொள்ளும்படியான ஒரு போக்கை உடையவராயிருக்கிறார். அந்த வழியானது இயேசு கிறிஸ்துவாக இருக்கிறது, மறுபடியும் பிறப்பதின் மூலமாகவே.

70. மின்னல் முதல்முறையாக வந்து, வானத்தின் குறுக்கே பளிச்சிடுவதை என்னால் காண முடிகிறது, நோவா, "தேனே, வேகமாக வா" என்றான்.

71. அவனுடைய மகன்கள் தங்கள் மனைவிமார்களிடம், "வேகமாக வாருங் கள்" என்று கூறினார்கள்.

72. அவர்கள் பேழைக்குள் பிரவேசித் தார்கள். ஏன், ஜனங்களோ, என்ன நடந்ததோ என்று வியப்பாக உள்ளதே? கொடுங்காற்று ஏதோ ஓரிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறதே" என்று கூறினார்கள்.

73. ஆனால் மிருக சிருஷ்டிப்புகளும் கூட ஏதோ தவறாயிருக்கிறது என்று அறிந்து கொள்ளும் அளவுக்கு அப்படிப் பட்ட ஒரு இழுப்பு அங்கேயிருந்தது. அங்கே மேலே அமர்ந்து கொண்டிருந்த வயதான அம்மா பறவையும் அப்பா பறவையும் அப்படியே பாடிக்கொண்

டிருப்பதை என்னால் காண முடிகிறது. மின்னல் முதல் தடவையாக இடி ஒலியை எழுப்ப, முதல் முறையாக அந்த அடையாளங்களும் அற்புதங்களும் சம்பவிக்கத் தொடங்கினபோது, தகப்பன் பறவையானது, "தாய் பறவையே, வேக மாக வந்துவிடு, நாம் நேராக பேழைக்குள் போய்விடுவோம், ஏனென்றால் நோவா சொன்னது சரியாகச் சம்பவிக்கப் போகி றது. அது தேவனுடைய ஆவியானவர் எனக்குள் அசைவாடுவதாக இருக்கிறது, நாம் பேழைக்குள் போய்விடுவோம்" என்று கூறுவதை என்னால் காண முடிகிறது.

74. அங்கு வெளியே அந்த மலையின் பக்கவாட்டில் மேய்ந்து கொண்டிருந்த தாய் ஒட்டகத்தையும், இங்கேயிருக்கும் தகப்பன் ஒட்டகத்தையும் என்னால் காண முடிகிறது. மின்னலின் முதலாவது பளீரொளியானது

ஆகாயத்தினூடாகப் போய், அடையாளங் களும் அற்புதங்களும் கண்ணுக்குத் தோன்றத் தொடங்கின போது, அப்பா ஒட்டகமானது அம்மா ஒட்டகத்தைப் பார்த்து, "வேகமாக வா, இதுதான் அது. இங்கே உள்ளே ஏதோவொன்று பலமாக பற்றி இழுத்துக் கொண்டிருக்கிறது, ஏதோவொன்று என்னை அசைத்துக் கொண்டிருக்கிறது, நான் பேழைக்குள் போயாக வேண்டும்" என்று கூறுவதை நான் கேட்கிறேன். அவைகள் பேழைக்குள் வரும் என்று தேவன் நியமித்திருந்தார் என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன்.

75. இன்றும் நான் அதை நம்புகிறேன், தேவனுடைய குமாரனுடைய வருகையின் அடையாளங்களும் அற்புதங்களும் எல்லாவிடங்களிலும் தோன்றிக் கொண் டிருக்கும் போது, தேவனுடைய சத்தத்தைக் கேட்க வேண்டுமென்று தேவனால் நியமிக்

கப்பட்டிருக்கிற ஒவ்வொரு மனிதனோ அல்லது பெண்ணோ, அவர்களால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு வேகமாக பேழைக்கு நெருக்கியடித்துக்கொண்டு சென்று, பாதுகாப்புக்குள் வந்து கொண் டிருக்கிறார்கள், அது மனிதன் தப்பிக்கொள் ளும்படியாக தேவனால் அருளப்பட்ட வழியாக இருக்கிறது. அது சரியே. அடையாளங்கள் தோன்றுவதையும், அற்புதங்கள் தோன்றுவதையும், மறை பொருளாயிருக்கும் இரகசியமான காரியங் கள் சம்பவித்துக் கொண்டிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள், நிச்சயமாக, ஆகாயத்தி னூடாக பறக்கும் தட்டுகளும் மற்ற எல்லா காரியங்களும். இயேசு, "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், அக்கினி ஸ்தம்பங்களும் மற்றும் புகைக்காடாகிய அடையாளங்கள் உண்டாகும்; கர்த்த ருடைய பெரிதும் பயங்கரமுமான நாள்

வருமுன்னே, இது சம்பவிக்கும்" என்று இயேசு கூறியிருக்கிறார்.

76. அவர் இந்த எல்லாவற்றையும் பேசியிருக்கிறார். சமுத்திரம் முழக்கமா யிருக்கும், ஆழிப் பேரலைகள் உடைத்துக் கொண்டுவரும்; மற்றும் எல்லா காரியங் களும் சம்பவிக்கும்; மனிதரின் இருதயங் கள் செயலிழந்து போகும், நாம் எப்பொ ழுதும் கொண்டிருந்ததிலேயே இருதயக் கோளாறு உடைய மிகப்பெரிய காலம்; திகில்; குழப்பமான காலம்; தேசங்களுக் கிடையே இடுக்கண். ஓ, என்னே. தீர்க்கதரிசி எப்படியாக, "இங்கேயிருக்கும் குதிரை இல்லாத அந்த வண்டிகள், அவைகள் அகன்ற சாலைகளில் விரைந் தோடும், அவைகள் தீவட்டிகளைப்போல விளங்கி, மின்னலைப் போல வேகமாய் ஓடும்" என்று கூறியிருக்கிறான். உரைக் கப்பட்டிருக்கிற எல்லாமே, நாம் இன்று

அதனுடைய முன்புறத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

77. அது என்ன? அது ஜனங்களாகிய உங்களுக்கு தேவனுடைய எச்சரிக்கையாக இருக்கிறது: "தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. ஆயத்தமாகு!"

78. "சகோதரன் பிரன்ஹாமே, நான் ஏன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்பட வேண்டும்? ” சகோதரனே, நீ ஒரு கலியாணத்திற்காக ஆயத்தப்படுகிறாய்; நீ மற்ற எதற்காகவும் ஆயத்தப்படுகிறாய். இந்தக் காரியங்கள் வந்து கொண்டிருப் பதை நீ காணும் போது, நீ தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. நீ உன்னுடைய தலையில் நரைமுடியைக் காணும் ஒவ்வொரு முறையும், உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தப்படுவது நல்லது என்பதையே அது அர்த்தப்படுத்துகிறது. இறுதிச் சடங்குகளை மேற்பார்வை

யிடுபவர் செய்யும் ஏற்பாடுகளை நீ கடந்து செல்லும் ஒவ்வொரு முறையும், தேவனைச் சந்திக்க ஆயத்தப்படுவது தான் அதற்கு அர்த்தம். ஒவ்வொரு முறை ஒரு குழந்தை பிறக்கும் போதும், தேவனைச் சந்திக்க ஆயத்தப்பட வேண்டும் என்பது நினைவிருக்கட்டும். இறுதி சடங்கு ஊர்வலம் கடந்து செல்லும் ஒவ்வொரு தடவையும், தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. ஒரு எச்சரிப்பாக நீ சுவிசேஷத்தைக் கேட்கும் ஒவ்வொரு முறையும், தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு.

79. தேவன் தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை உடையவராயிருக்கிறார். நீங்கள் பாதுகாப்பாக இருக்கும் இடமாகிய, இயேசு கிறிஸ்துவுக்குள் இப்பொழுதே வந்துவிடுங்கள். அந்த மிருகங்கள் ஒவ்வொன்றும், ஜோடு ஜோடாக, சரியாகப் பேழைக்குள் பிரவேசித்தன.

தேவனுடைய கடுங்கோபத்திலிருந்து உண்மையிலேயே தப்பிக்கொள்ள விரும்பு கிறவர்களுக்காக தேவன் எப்போதுமே ஒரு வழியை உண்டாக்குகிறார்.

---

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**



# தேவனுக்கு முன்பாக மனந்திரும்புதல் அவருடைய கோபத்தை நிறுத்துகிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-07-24 தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை

---

56. இங்கு நாம் காண்பது என்னவெனில், இந்த தீர்க்கதரிசிகள் உரைத்தனர். அவர்கள் உரைத்தவை நிறைவேறின.

தேவ கோபாக்கினை ஜனங்களின் மேல் ஊற்றப்படும் போது, ஒரு காரியம் மாத்திரமே... **ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று அந்த தீர்க்கதரிசி உரைத்திருந்தால், தேவனுடைய கரத்தை நிறுத்தக் கூடியது ஒரே ஒரு காரியம் மாத்திரமே, அது தான் மனந்திரும்புதல்.**

**தேவனுக்கு முன்பாக மனந்திரும்புதல் அவருடைய கோபத்தை நிறுத்துகிறது.**

**அப்படியானால் அதற்காக காத்திருக்காதீர்கள், இப்பொழுதே அதை செய்யுங்கள் !**

~ 3 ~

**தேவன் ஒன்றைக் கூறுவாரானால், அதை உடனே செய்யுங்கள்.**



Bro. Branham:

**72. மாற்றப்படாத ஒரு இருதயத்திற்கு பாவமானது மகிழ்ச்சி அளிக்கின்ற ஒன்றாய் இருக்கும். மாற்றப்படாத மனதிற்கு அது அருமையானதாக இருக்கும். ஆனால் அது மரணத்திற்குரிய வழியாகும். மரணத்தைத் தவிர வேறொன்றும் மீதம் இருக்காது. "பாவத்தின் சம்பளம் மரணம்". ஆகவே சம்பளமாகிய அறுவடையை நீ செய்தாக வேண்டும். நீ காற்றுக்கு (winds) விதைத்தாய், இப்பொழுது சூறாவளி காற்றை (whirl wind) அறுக்கிறாய்.**

செய்தி: ஆவிக்குரிய நினைவிழப்பு, பத்தி எண் 72

# அது மிகவும் அப்பாவித்தனமானது

~~~~~~~

பாவம் மிக மிக மயக்கியிழுக்கக்கூடியது. ஓ, அது கவர்ச்சிகரமானது. உண்மையாகவே பாவமானது பசியை தீர்க்கும்விதமாக கேட்டுக் கொண்டேயிருக்கும். அது மிகவும் அப்பாவித்தனமானது. ஏன், அது அவ்வாறு தான் தோற்றமளிக்கிறது... அது மிகவும் கபடற்ற விதமாகத் தோற்றமளிக்கிறது. நீங்கள் அதற்குக் கவனம் செலுத்த வேண்டாம்.

~~~~~~~

செய்தி: *யூகித்தல்*, ஏப்ரல் 8, 1962

# உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து